-**Judicial Form No**.53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

| | | |
|---|---|---|
| Calendars<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | } | Case No. CC 31 of 2024 |

Depositions of PW -2 witness for ________ { Prosecution / Defence / Court

Name : வீரன்

Father's Name : ஆரான்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27th **day of November** 2025.

(**2** ம் எதிரி ஆஜர் படுத்தப்பட்டார்**. 1** ம்**, 3** ம் எதிரிகள் ஆஜர்**. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1. நான் திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை தாலுகா, பூளவாடி கிராமத்தில் குடியிருந்து கொண்டு டாஸ்மாக் கடையில் சேல்ஸ்மேனாக பணி செய்து வருகிறேன். நான் பூரண்டாம்பாளையம் டாஸ்மாக் கடையின் 22 67 சேல்ஸ்மேன் ஆக கடந்த 07.07.2023 ஆம் தேதி வழக்கம் போல் இரவு 10.00 மணிக்கு வியாபாரம் முடிந்து பூட்டி விட்டு சென்றேன். மீண்டும் மறுநாள் 08.07.2023 ஆம் தேதி காலை சுமார் 06.30 மணியளவில் சூப்பர்வைசர் பாலசுப்பிரமணியன் எனக்கு போன் செய்து கடையின் பூட்டு உடைத்து இருப்பதாக தனக்கு கடையின் உரிமையாளர் சிதம்பரம் சொன்னதாக தகவல் சொன்னார். நானும் வீட்டிலிருந்து கிளம்பி சுமார் ஒரு மணி நேரத்திற்குள் கடைக்கு சென்றேன். அப்போது நான் பார்த்த பொழுது கடையின் பூட்டு உடைக்கப்பட்டு ஷட்டர் பாதி அளவில் திறக்கப்பட்டு இருந்தது.

2. பின்னர் இது சம்பந்தமாக பாலசுப்பிரமணியன் மாவட்ட அலுவலகத்தின் தகவல் சொல்லி அவரும் சம்பவ இடம் வந்ததும் நாங்கள் கடையினுள் சென்று இருப்பு சரிபார்த்த

பொழுது 16 பாட்டில்கள் குறைவாக இருந்தது. பின்னர் வழக்கு சம்பந்தமாக புகார் அளித்தார். போலீசார் முன்னிலையில் தான் நாங்கள் இருப்பு குறைபாடுகளையும் கண்டுபிடித்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1 **TO** 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. பாலசுப்பிரமணியன் எனக்கு 08.02.2023 ஆம் தேதி காலை 06:15 மணியளவில் சம்பவம் குறித்து தகவல் சொன்னார் என்றால் சரிதான். நான் அதே கடையில் சுமார் நான்கு வருடங்களாக வேலை செய்து வருகிறேன். எங்களுக்கு எத்தனை வருடங்களுக்கும் ஒருமுறை பணி மாறுதல் வரும் என்றால் அவ்வாறு குறிப்பிட்டு வருடம் கிடையாது. நான் கடைக்கு வந்த பொழுது காலை சுமார் 07.15 இருக்கும். நான் காலை 07.15 மணிக்கு வரும்பொழுது போலீசார் கடையின் முன்பாக இருந்தார்கள் என்றால் சரிதான். எத்தனை போலீசார் கடைக்கு வந்திருந்தார்கள் என்றால் சுமார் மூன்று போலீசார் வந்திருந்தார்கள். அவர்களின் பதவி மற்றும் பெயர் எனக்கு தெரியாது. நான் கடைக்கு வந்த பொழுது மூன்று போலீசார் மற்றும் பாலசுப்பிரமணியன் மற்றும் இருந்தார்கள், வேறு யாரும் இல்லை என்றால் சரிதான்.

2. போலீசார் வந்த பின்புதான் கடையினுள் சென்றோம். அதற்கு முன்பாக கடையினுள் செல்லவில்லை என்றால் சரிதான். கடையின் உள்ளே அடுக்கி வைக்கப்பட்டிருந்த பாட்டில்கள் கலைந்து இருந்தது. எங்கள் கடையில் சிசிடிவி கேமராக்கள் உள்ளது என்றால் சரிதான். மது பாட்டில்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்த அலமாரி எந்த திசையை நோக்கி உள்ளது என்றால் கிழக்கு திசையை நோக்கி உள்ளது. மொத்தம் எத்தனை ராக்குகள் அலமாரியில் உண்டு என்றால் மூன்று அல்லது நான்கு இருக்கும். எந்தெந்த ராக்குகளில் இருந்து என்னென்ன மது பாட்டில்கள் அடுக்கி வைக்கப்பட்டதில் குறைபாடுகள் இருந்தது என குறிப்பிட்டு போலீசார் என்னை விசாரித்த பொழுதும் நீதிமன்ற முதல் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. சம்பவ இடத்திலிருந்து போலீசார் கைரேகை பதிவுகள் எடுத்துச் சென்றார்கள் என்றால் சரிதான். சம்பவம் இடத்திற்கும் என்னுடைய வீட்டிற்கும் சுமார் 27 கிலோமீட்டர் இருக்கும். சாட்சி பாலசுப்பிரமணியன் சம்பவம் குறித்து தனக்கு காலை 06.30 மணிக்குத்தான் தெரியும் என சொல்லி உள்ள நிலையில் 06:15 மணிக்கு எனக்கு போன் செய்திருக்க வாய்ப்பு இல்லை என்றும் நான் சம்பவம் குறித்து தனக்கு தெரிந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மாவட்டம் மேலாளர் அவர்கள் வந்த பிறகு தான் கடையினுள் சென்று இருப்பு பதிவுகளை பார்வையிட்டதாக பாலசுப்பிரமணியம் சொல்லி உள்ளார் என்றும் நான் சம்பவ இடத்தில் இருந்திருந்தால் மாவட்ட மேலாளர் வந்த பிறகு தான் உள்ளே சென்று இருப்பு பதிவுகளை பார்த்த விபரம் எனக்கு தெரிந்திருக்கும் என்றும் நான் சம்பவ இடம் செல்லாததால் தான் போலீசார் வந்தவுடன் போலீசார் முன்னிலையில் கடையினுள் சென்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4. பூட்டின் சாவி என்னிடமும் ஒன்று உள்ளது என்றால் சரிதான். உடைக்கப்பட்டதாக

சொல்லப்படும் பூட்டு சம்பவ இடத்தில் இருந்ததா என்றால் எனக்கு அது சம்பந்தமாக தெரியாது. மேலும் உடைக்க பயன்படுத்தியதாக சொல்லப்படும் ஹலோ அல்லது கம்பியோ அங்கு இருந்ததா என்றால் அவ்வாறு எதுவும் இல்லை. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. போலீசார் கேட்டு கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கு சம்பவத்திற்கும் எவ்வித சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.11.27 18:30:19 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**